# கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் - 'திராவிட மாடல்' அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னின்று நடத்திய வையகத்திற்கே வழிகாட்டும் - வரலாற்றில் நிலைத்திட்ட 'வைக்கம் விழா' காட்சிகள் காணீர்!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என். வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி. சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நூலகத்தை பார்வையிட்டார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என். வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், வைக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆஷா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி. சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் நேற்று (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவில், நினைவகத்தில் உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என்.வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறைஅமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



'தந்தை பெரியாரின் வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழா'வில் பங்கேற்றிட கேரள மாநிலம், வைக்கம் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு – பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்த காட்சி!

### சோ.துரை பாண்டியன் தலைமை! ஆர்.குமரேசன் ஒருங்கிணைப்பு!

## கோவை கவுண்டம்பாளையம் பகுதி 35வது வார்டில் போர்வெல் அமைப்பு!

### நா.சம்பத் எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது!

கோவை, டிச. 13 -

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதிக்கு உட்பட்ட 35வது வார்டில், மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் பேரில், மாவட்டச் செயலாளர் தோ.ஆ.ரவி ஆலோசனையின் பேரிலும், இளைஞர் அணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, இடையர்பாளையத்தில் , கா.மருதமுத்து நினைவு முத்தமிழ் மன்றம் அருகில் உள்ள குறுக்கு சந்துகளில் நடந்த சாலை பணிகள் அமைக்கும் நிகழ்வு, அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன் தலைமையில், வட்டக் கழக செயலாளர், ஆர். குமரேசன் ஒருங்கிணைக்க 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் முன்னிலையில் அனைவரும் கலந்து கொண்டனர் .

மாமன்ற உறுப்பினர் சம்பத் அவர்களின் விடா முயற்சியின் பேரில், பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, 20 வருட நெடுங்காலமாக சாலைகள் போடப்படாமல் இருந்ததை, கான்கிரீட் சாலைகளாக மாற்றப்பட்டு புதுமைப் பொலிவுடன் காணப்படுவதோடு, எங்கள் பகுதியில் புதிய கழிவுநீர் சாக்கடைகள், பொதுமக்களுக்கு உபயோகத்திற்காக சீரான குடிநீர் விநியோகம் மற்றும் குறிப்பிட்ட பகுதிகளில் போர்வெல் போடப்பட்டன போன்ற இவை அனைத்தும் 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத், பெரும் முயற்சியால் மாநகராட்சியின் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்பட்டன என்பதால், பொதுமக்கள் குறிப்பாக மகளிர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து பாராட்டு தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மகளிர்களுக்கும் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் இனிப்புகள் வழங்கி, உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினம் உற்சாகமாக கொண்டாடப்பட்டது .


